Registered as a News Paper in Ceylon

P. M. G- No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ஹு (1889) ஆவணி மீ 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது

தனிப்பிரதி: சதம் 10

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-சூக] யாழ்ப்பாணம்:- ஏவிளம்பி ஹு ஆவணி மீ எ உ வெள்ளிக்கிழமை (23 AUGUST 1957) [இல-உ0]

## எழில் திகழ் ஈழம்

.... "கண்ணன்" ...

மீன்கொடியும் புலிக்கொடியும் விளங்கியநன் ஞடு
விற்கொடியோன் ஆண்டதிரு மாந்தைதிகழ் நாடு
தேனருவி மாணிக்க கங்கைவள நாடு
சிங்கைநகர் ஆரியர்கள் ஆண்டபெரு நாடு
பானகையாள் ஆடகநற் சவுந்தரியின் நாடு
பாண்டியனுர் அல்லியர சாண்டதமிழ் நாடு
வான்விழினும் கலங்காத சங்கிலியாம் மன்னன்
வன்மையுடன் போர்புரிந்த வளமுடைய நாடு.

## துன்பம் நீங்கும் வழி

### அகச் சோதனையுடன் இறைத்தியானம் வளரவேண்டும்

––0–0––

உங்களுக்கு இப்பொழுதுள்ள துன்பங்களெல்லாவற்றுக்கும் காரணம் உங்களுடைய பிழையான மனப்பான்மையேயன்றிப் பிறிதொன்றல்ல. இப்பொழுது நீங்கள் அடைந்திருக்கும் துன்பமான வாழ்க்கை நிலைமைக்கு உங்களை விட யாராயினும் எதுவாயினும் காரணமென்று நினைக்க வேண்டாம்.

தனது எதிர்கால நிலைமைக்கு மனுஷன் தானே காரணனுயிருக்கின்றான். மிக உயர்ந்த உன்னத நிலைக்கு அவன் தன்னை உயர்த்தலாம். அல்லது மிகத் தாழ்ந்த நிலைக்குத் தாழ்த்தலாம்.

உங்கள் வாழ்க்கையை வலியுடையதாய், சுதந்திரமானதாய் இன்பமானதாய் மாற்ற விரும்பினுல் அம்மாற்றத்துக்கு வேண்டப்படும் சக்தி உங்களிடமேயிருக்கின்றது. அது திடசித்தமொன்றேயாகும். வெளியிலிருந்து அறிய வரும் மூடக் கொள்கைகளுக்கும், அதிர்ச்சியுண்டாக்கும் சக்திகளுக்கும் அச்சங்களுக்கும் இடங் கொடுக்க வேண்டாம்.

ஒருவருடைய மனப்பான்மைக்குப் பெரும் அளவு காரணமாயுள்ளது அவருடைய ஒழுக்கமும் பழக்கமுமாகும். ஒருவர் அகமுகமாய் நோக்கித் தன்னைத் தானே சோதிப்பாராஞல் தாம் அடைய வேண்டிய சித்திக்கும் சமாதானத்துக்கும் இடையூருயிருக்கும் குறைபாடுகளை நன்கு அறிவார். வாழ்க்கையிற் குழப்பங்களை உண்டாக்கிய குற்றபாடுகளை நீக்குதற்குச் சிறந்த சாதனமாவது அகத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவனைத் தியானித்தலாகும்.

ஸ்ரீ சுவாமி இராமதாசர்

அரசியல் அலை

## பசுப் போர்வையிற் பண்டாரநாயக

––––0––––

### புலிப்பாய்ச்சலிற் போருக்கழைக்கின்ருர் சேனநாயக

### இருதலைக்கொள்ளி இடையில்?

'இருந்து பாருங்கள் எல்லாம் ஆநந்தம்' என்று ஒப்பந்தஞ் செய்தவர்கள் ஆறுதல் கூறுகின்ருர்கள். பசுப் போர்வையிலே முதல்அமைச்சர் சமரசம் பேசுகின்ருர் என்று தமிழகத்துக்கு ஒரு பக்கத்திலே சஞ்சலம். பசுப் போலத் திரிந்து வந்த பழைய பிரதமர் சேனநாயக பழி வாங்கும் நோக்கமாகப் புலிப் பாய்ச்சலிற் பயமுறுத்துகின்ற இடுக்கண் மறுபக்கம். இந்த இரு வேறு இன்னல்களுக்கிடையிலே தமிழகம் இருக்கின்றது.

கழனிக் கரைக் கொள்கையைத் தழுவிக்கொண்டு நிற்கின்ருராம் சேனநாயக. மொழிக் கொள்கையை முகூர்த்தத்துக்கு முகூர்த்தம் மாற்றியமைக்கும் பழைய முதல் மந்திரி புலியாய் நின்ருல் என்ன பசுப் போர்வை போட்டு நட்புரிமை பூண்டாலென்ன விளையும் பயனெல்லாம் ஒன்றுதான். இவ்விதமே இப்பொழுது பிரதமர்எடுத்துக் கொண்ட வேடம்.

ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்வதா? இல்லையா? என்று ஒரு கேள்வி. ஒப்பந்தத்தை ஒதுக்கிவிடுவதென்ருல் இனி என்ன செய்வது என்பதற்கு என்ன திட்டம் இருக்கின்றது என்று மறுகேள்வி. ஆனல் உண்மையில் ஆராயப்படவேண்டியது ஒப்பந்தம் விளைவிக்கும் பயன் வேண்டப்படத் தக்கதா? விலத்தப்பட வேண்டியதா? என்பதுதான். அமுதம் என்ருெருவர் அளிப்பதை நஞ்சுதான் என்கின்றனர் ஒரு சாரார். இல்லை அது அமுதம்தான், நாங்களும் அதை உண்டுபண்ணுவதில் உதவி செய்தோம், என்கின்றனர் இன்னொருசாரார். இந்த வேளையிலே உள்ளபடி இது விடங் கலந்த அமுதமா இல்லை சுத்தமான அமுதமா என்று பரிசீலனைசெய்வதா? இதை ஏற்றுக்கொள்ளாவிட்டால் என்ன செய்வது என்று ஆலோசனை செய்வதா? எது புத்தியின் பாற்பட்டது என்பதைப் பாரம்பரியமாய் மதி வளத்தை மரபாகக் கொண்ட தமிழகம் அறிய முடியாமல் அல்லற் படுகின்றதா?

### எப்படியானலும் சத்தியாக்கிரகமாம்!


குருணகல் நகர மண்டபத்தில் நடந்தகூட்டமொன்றில் ஸ்ரீ கே. எம். பி. இராசரத்தின பேசும்போது அறுபத்தைந்து இலட்சம் சிங்களவர்களுடன் ஐப்பசி (அக்டோபர்) முதலாந்தேதி சத்தியாக்கிரகம் தொடங்கப் போவதாகக் கூறினர். மந்திரிப் பதவிகளைக் காப்பாற்றும் ஆசையால் ஸ்ரீ தகநாயக போன்ருேர் தனிச்சிங்கள சட்டத்தைக் காற்றிற் பறக்க விட்டுள்ளனர் என்பது அவர் கூறும் நியாயம். குறித்த ஒப்பந்தம் தமிழ் மக்களுக்குத் துரோகஞ் செய்கின்றது என்கின்றனர் தமிழினத்தைச் சேர்ந்த ஒருசாரார். அப்படியிருக்கவும் சத்தியாக்கிரகமாம்.

## திருமுருகன் இளமை வனப்பு

––––:O:––––

ஸ்ரீமத் சுவாமி விபுலானந்தர் அவர்கள்

[ பண்டித மயில்வாகனனர் B. Sc. ஆகவிருந்த காலத்தில் "குமரன்" திங்கள் வெளியீட்டில் வெளியிட்ட விஷயம். முருகனடியார்க்குப் பயன்படுமாறு வெளியிடப்படுகின்றது. ]



பரமர்திருச் சடைப்புனலும்
பரைதிருக்கைம் மலரும்
படிந்தழகு விளங்குதிருப்
பதங்கினந்து கினைந்தெஞ்
சிரமிசைவைத் தருணகிரி
திருப்புகழாற் புகழ்ந்து
திருமறையின் பொருளுரைத்த
சிவகுருவே யென்போம்
சரவணத்தில் வந்துதித்த
தனிமுதலே யென்போம்
தமிழ்விளக்கே பரஞ்சுடரே
தமனியப்பொன் னுருவே
திருமுருக நினதிளமைச்
செவ்வியையாங் காணச்
சிறியேமுக் கருள்புரியுந்
தெள்ளமுதே யென்போம்.

இமயமலையின் வடசாரலிலே கருங்குவளைப் பூமலிந்த பசிய சரவணப் பொய்கையானது தெய்வ வனப்போடுவிளங்குகின்றது. ஒரு நாட் காலையில் அன்பினுற் கவரப்பட்ட உள்ளத்தினராகிய நாரதமுனிவர் இப்பொய்கைக் கரைக்கு வந்தார். வந்து தம்முன் தோன்றிய தெய்வக் காட்சியைக் கண்டு மனமுருகி ஆராமை மிக்கு இமையா விழியினின்றும் உவகைக் கண்ணீர் கலுழச் சிரமேற் கூப்பிய கரத்தராய்ச் சுவரிற் றீட்டிய சித்திரம்போலநின்ருர். சிறிது பொழுதிற் கசிவுற்ற உள்ளமானது ஓரளவுக்கு நிலை பெற்று நீங்க எழுமையைய துக்கும் யாழினைக் காத் தெடுத்துச்சுதிகூட்டிமிடற்றுங் கருவியும் ஒருங்கு செல்லப் பாடுவாராயினர்.

கண்ணு யிரத்தோன்
மிடிதீர்க்குங் கருத்தாலுலகு
தழைத்தோங்கத்
தண்ணூர் கமலத் திருக்கரத்திற்
றனிவே லெடுத்த
பெருமானே
தண்ணூர் கமலத் திருக்கரத்திற்
றனிவே லெடுத்துஞ்
சிறு மகவாய்
விண்ணோர்வாழச்சரவணத்தில்
விளையாட் டயரும்
வியப்பென்னே.
அரியு மயனும் பெரிது முயன்
றமைத்துப் புரக்கு
மவனியெலாம்
சரியக் கணத்திற் றுகள்படுத்
துஞ், சதுர்வே லெடுத்த
முதல்வோனே
சரியக் கணத்திற் றுகள்படுத்
துஞ், சதுர்வே லெடுத்துஞ்
சிறுமகவாய்
விரிதண் கமல மலர்சிதைத்து
விளையாட் டயரும்
விழைவென்னே.
"அள்ளற் பள்ளத் தகன்பணை
நாட், டால வாயை
யழிக்கவரும்
வெள்ளஞ் சுவற்றிக் கடல
லைத்த, விறல்வே லெடுத்த
திறலோனே
வெள்ளஞ் சுவற்றிக் கடல
லைத்த, விறல்வே லெடுத்துஞ்
சிறுமகவாய்
மெள்ளத் தவழ்ந்து விரல்
சுவைத்துவிளையாட் டயரும்
விதமென்னே",

என்று இவ்வாறு பாடித் துதித்து அருந்தவப் பேற்றினை[illegible]டயாராகிய இருடி பத்தினிமார் அறுவரும் பாலூட்டி வளர்த்த ஆறு திருவுருவங்களையுந் தனித் தனியாக நோக்கினர். ஒரு திருவுருவம் அறுவரன்னைமாருள் ஒருவருடைய மடித்தலத்திலிருந்து அவ்வன்னையினது முகத்தைப் பார்த்து இள நகை புரிந்து குதலைச் சொல் மொழிந்துகொண்டி

தொடர்ச்சி 6-ம் பக்கம்

### செல்வச்சந்நிதியில் கும்பாபிடேகம்

தொண்டமானுறு செல்வச் சந்நிதியிற் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் சிவசுப்பிரமணியப் பெருமானுடைய மூலஸ்தானத்துடன் பரிவாரமூர்த்திகளின் மூலஸ்தானங்களும் திருத்தி அமைக்கப்பெற்றிருத்தலால் ஆவணி மீ 3 உ (19-8-57) திங்கட்கிழமை சம்புரோட்சண கும்பாபிடேகம் சிறப்பாக நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் அறிவித்தல்

ஆவணி மாசம் 8-ம் திகதி சனிக்கிழமை 9ம் திகதி ஞாயிற்றுக்கிழமை (24, 25-8-57) சைவப்பிரகாச யந்திரசாலையும் இந்துசாதனக் காரியாலயமும் நல்லூர்க் கந்தசுவாமி கோயில் தேர் தீர்த்த உற்சவங்களின் பொருட்டு மூடப்பட்டிருக்கும் என்பதை அன்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

அதிபர்.

THE SAIVAPRAKSA PRESS

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர்வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

ஏவிளம்பி ஸ்ரீ ஆவணி மீ
எ௨ வெள்ளிக்கிழமை

## உரிமை பெறுதற்கு உரிய வழி

உடன்படிக்கையைப் பற்றி உண்மையான விபரங்கள் சட்டத்திட்ட மூலம் அறிவதற்குமுன் ஒன்றும் பேசாதிருத்தல் நெறி என்பதை யார்தான் மறுப்பர். ஆனல் அதற்கிடையில் இந்த ஒப்பந்தம்நிறைவேற்றப்பட்டோ அல்லது நிராகரிக்கப்பட்டோ ஒதுக்கப்பெற்ருல் அடுத்த படியாகத் தமிழகம் என்ன செய்வதென்று பலரும் பலவேறு நோக்கங் கொண்டு கேட்கின்றார்கள்.

தனிச்சிங்களச் சட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன் தமிழ்மொழிக்குச் சம உரிமை கேட்பதற்கு கட்சித் தலைவர்களும் அரசியல்வாதிகளும் எத்தனையோ ஆலோசனைகள் செய்ததுமன்றி செயலாற்றும் வழிவகைகளையும் வெளிவிட்டிருந்தார்கள். நீதிக்கு மாறான நீண்டகால ஆட்சி உரிமைக்கு விரோதமான, நீணிலத்தில் மனித நெறிக்கு எதிரான சட்டத்தை எதிர்ப்பதற்கு உண்மை ஒழுக்க வழியில் அன்பின் அடிப்படையில் அழுக்காறு, ஆகாத செயல், வெகுளி, விரோதம் முதலியன மறந்தும் நினையாது பணிசெய்வதேபழையபண்பாட்டிற்கமைந்த நெறி.

உடன்படிக்கைக்கு நாளுக்கு நாள் வெவ்வேறு விளக்கவுரை விடுக்கின்ற பிரதமர் ஆகக்கடைசியாக அளித்த வியாக்கியானத்தில் நுணுக்கமான பொருள் புலப்படக்கூடிய வகையில் நூதனமாக நுவலுகின்றார்; தியாகம் தினையளவும் செய்யாது சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்குமிடையிற் சினேக மனப்பான்மையைத் தாம்உண்டு பண்ணிவிட்டதாக நாணமின்றி வீரங்கூறுகின்றார் தமிழ்ப் பேசும் மக்களைத் தங்கள் உரிமைகள் யாவற்றையும் தியாகஞ் செய்யக் கட்டளையிடும் வகையிலே தனிச் சிங்களச் சட்டம் வகுத்த முதல் அமைச்சர் அச் சட்டம் இட்டபடி இம்மியளவும் மாற்றமின்றி இருக்கத் தக்கதாகத் தமிழ் பேசும் மக்களுக்கு ஆறுதல் அளிக்கின்றார் என்றால் இக் கூற்றின் கருத்தென்னையோ?

## சென்னை மாணவர் மன்றம்

### வெள்ளி விழா

தமிழகத்திலே தமிழ்த் தொண்டாற்றி வரும் கழகங்களுள், தலைசிறந்து விளங்கி, மாணவரின் தமிழ் வளர்ச்சிக்கே சிறப்பாகத் தொண்டாற்றித் தேர்வுகள் நடாத்திப் பரிசில்களும் பட்டங்களும் வழங்கி வரும் சென்னை மாணவர் மன்றத்தின் வெள்ளிவிழா சென்னை சேர். தியாகராயர் கல்லூரியில் அமைக்கப் பெற்ற மணியரசர் பந்தலில், நாவலர், கலாநிதி எஸ். சோமசுந்தரபாரதியார் அவர்கள் தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. தமிழ் நாட்டுப் பெரு மக்களும் மாணவரும்பங்குபற்றினர்.

# மாணுக்கர் மதிவள மன்றம்

"தமிழ் வேள்"

## திருவிளையாடற் புராணம்

(முற்றொடர்—3)

### விறகு விற்ற படலம்:

சென்ற பாடத்திலே வரகுணனுக்குச் சிவலோகங் காட்டிய படலத்தை உங்களுக்குச் சுருக்கிக் கூறினேன. அப்படியல்லவா? (ஆம்) இப்போது விறகுவிற்ற படலத்தின் சுருக்கத்தை நீங்கள் கூறவேண்டும். நீர் கூறும் பார்ப்போம் யாவரும் நன்றாகக் கவனித்துக்கொள்ளுங்கள்.

"வரகுணபாண்டியன் ஆட்சிக் காலத்திலே வடதேசத்தினின்று ஒரு யாழ்ப்பாணன் (யாழ்ப்பாணன்—யாழ்வாசிப்போன்) மதுரைக்கு வந்தான். அவன் பெயர் ஏமநாதன். அவன் யாழ்வாசித்துப் பாண்டியனிடம் வரிசைகள் பலவும் பெற்று "என்னை வெல்வார் எவருமில்லை" எனச் செருக்கடைந்திருந்தான்.

பாணபத்திரன் என்றும் ஒரு இசை வல்லுநன் மதுரையில் இருந்தான். சோமசுந்தரப் பெருமானிடத்திலே நீங்காத பத்தியுடையவன். அடியார்க்கெளியவராகிய சிவபெருமான் பாணபத்திரன் பொருட்டாக விறகு சுமந்து—'சாதாரி' என்னும் பண்டிய ஏமநாதனின் செருக்கையடக்கினர் சாதாரி என்பது ஒரு பண். தேவாரம் பாடுகிறார்களே பண்ணுடன். அது போன்ற ஒரு பண், அது மூலையிலத்து இராகம் எனப்படும்) ஏமநாதன் வந்த திசையை நோக்கி ஓட்டெடுத்தார்."

சுருக்கம் நன்றாயிருக்கின்றது. இதுபோலவே ஏனைய பாடங்களுக்கும் சுருக்கங் கூறப் பழகிக்கொள்ள வேண்டும்.

இப்பொழுது இப்பாடத்திலுள்ள அரும் பதங்களின் பொருள்களைக் கூறுகின்றேன். அவதானித்துக்கொள்ளுங்கள்.

விருது - வெற்றி; பீதாம்பரம் - பொன்னுடை; அம்பலம்-பொது இடம்; பிரார்த்தித்தல் - மன்றாடுதல்; சுதிகூட்டுதல் - யாழி நரம்பைத் தொட்டுச் சரி செய்தல்; விஞ்சையர்-வித்தியாதரர்; இயங்கியற்பொருள் - அசைவுள்ள பொருள், சரம்; நிலையியற்பொருள் - அசைவிலாப் பொருள், அசரம்; நாதாந்த-ஞான நெறி; ஞானந்தம் - பேரின்பம்; அண்டங்கள் - உலகங்கள்; குறையிரத்தல்-முறையீடு செய்தல்; புறங்கடை - வெளிக்கதவு.

இனி இப்பாடத்திலே உடன்றோழிற் குற்றங்களெனக் கூறப்படுகின்றன. அதாவது பாடும்பொழுது வயிறு குழிபட வளைதல், அழுமுகங்காட்டுதல்; கண்டம வீங்குதல், பையைப் போல வாயைத் திறத்தல், பற்களைக்காட்டுதல் முதலான தன்மைகள் இருத்தல் கூடாதென இசை நூல் வல்லுநர்கள் இடம்புகின்றனர்.

### வேத சிரசுகளாகிய உபநிடதங்கள்:

அதாவது வேதமானது கருமகாண்டம், ஞானகாண்டம என இரு பகுதிகளையுடையது. இவற்றுள் ஞான காண்டத்தை உணர்த்தும் பகுதி உபநிடதங்கள் எனப்படும. இவை மெய்ஞ்ஞானத்தைப் போதிக்கும் பகுதியாதலின் வேதசிரசுகளாகிய உபநிடதங்கள் எனப்பட்டன. இவை சிருத்திரம் முதலாக முப்பத்திரண்டு வகைப்படும்.

இப்பாடத்திலே விறகு சுமையாளராகிய சிவபெருமான் பாடிய பாடல்கள் மூன்று உள. அவற்றின் பொழிப்பைக் கூறுகின்றேன் கவனியுங்கள். முதலாவது;

விரைசார் மலரோனறியா விகிர்தன்-வாசம் பொருந்திய தாமரைமலரில் வீற்றிருக்கும் பிரமதேவர் கண்டறியாத வேறுபாட்டினையுடைய சிவபெருமான்; அரசாய் மதுரையமர்ந்தானென்னே - பாண்டியன் திருக்கோலங்கொண்டு மதுராபுரியில் வீற்றிருந்தனன; அஃதியாது காரணமோ?; அரசாய் மதுரை அமர்ந்தான் - அரசனுய் அம் மதுரைப்பதியில் வீற்றிருந்த அப்பெருமான்; என், புரைசார் மனனும் புகுந்தானென்னே - என்னுடைய களங்கமமைந்த மனத்திலுங் குடியிருந்தான், அஃதியாது காரணமோ?

இரண்டாவது பாடல்; பாடன் மறையுந் தெரியாப் பரமன்-பாடலமைந்த வேதங்களுந் தெளியாத பரமசிவன்; கூடல் கோயில் கொண்டானென்னே - மதுராபுரியில் திருக்கோயில் கொண்டெழுந்தருளினன், அஃதியாது காரணமோ; கூடல் போலக் கொடியேனகமும் - அம் மதுராபுரியைப் போல; கொடுந்தொழிலையுடையஎன் மனத்தையும்; ஆடலரங்காவமர்ந்தானென்னே— ஆடற்றொழிலமைந்த நடனசாலையாகக் கொண்டு வீற்றிருந்தருளினன் அஃதியாது காரணமோ?

மூன்றாவது பாடல்: நிலவண்ணன் றேரு நிமலன்-நீலமேக வண்ணராகிய திருமால் தேடியுணராத சிவபெருமான்; ஆலவாயிலமர்ந்தானென்னே — திருவாலவாயிலெழுந்தருளியிருந்தனன், அஃதியாது காரணமோ? ஆலவாயானலரில் வாசம் போல அத்திருவாயில் எழுந்தருளிய சிவபெருமான் மலரில் மணம்போல என்னுளமு புகுந்தானென்னே— ஏழையேன் மனத்திலுங் குடிபுகுந்தனன், அஃதியாது காரணமோ?

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

## பொருள்விசாரப் பிடித்த கவிஞர்தான் புலவர்

—:0:—

4-ம் பக்கத் தொடர்ச்சி

மணிமேகலையை எட்டிப் பார்ப்போம்; "அறம் பொருளின்பம்" — நடுவணதெய்தஇருதலையுமெய்தும்" "ஈதல் அறம்" — "தீவினைவிட் டீட்டல்பொருள்" என்பவை ஞாபகமிருக்கட்டும்.

சாதுவன் பொருள் தேடப் போனவழியிலே புண்ணிய விசேஷத்தினலே கப்பல் உடைந்து கவிழ்ந்து போக, உடைந்த மரத்துண்டொன்றைப் பற்றி நீந்திக் கரையேறி நாகர் வாழும் மலைப் பக்கத்தையடைந்து ஒரு மரநீழலிலே படுத்து அயர்ந்து நித்திரை செய்கின்றான். மனிதரைப் புசிக்கும் நாகர் அவனைக் காண்கின்றனர்.

'நல்ல சாப்பாடு கிடைத்திருக்கிறது' என்று கதைக்கின்றனர். இந்தக் கதை அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்த சாதுவனின் செவிகளிலும் நுழைகின்றது. விழிக்கின்றான் அவனுக்கு நாகபாஷை நன்கு தெரியும். நாகபாஷையில் அவர்களோடு கதைக்கின்றான். சாதுவன் நாகபாஷை பேசியது நாகருக்கு வெகு சந்தோஷம். அவனைக் கொல்ல முயற்சிக்கவில்லை. அன்போடளவளாவித் தமது குருமகனிடம் அழைத்துச் செல்கின்றனர். குருமகனேடு கதைக்கின்றான்.

குருமகன் சாதுவனைக் குருவாகக் கொள்கின்றான். கொல்லாமை, புலாலுண்ணாமை முதலிய தர்மோபதேசஞ் செய்கின்றான் சாதுவன் பொருள்தேடப் போன சாதுவனுக்கு நல்ல பொருள் கிடைத்தது — நிறையக் கிடைத்தது கலங் கவிழ்ந்தோ, வழிதப்பியோ அந்தரித்து வந்தவர்களுடைய ஆடை ஆபரணம பொருள் பண்டம அவை நிறைய நிறைய வாரி வாரி அள்ளிக் கொண்டு சொந்த நாட்டுக்கு வருகின்றான்; வீட்டுக்கு வந்து சேர்கின்றான். அவன் மனைவியோ கற்புக்கரசி. "அழக் கொண்ட பொருள்" கொண்டு இல்லறம் நடக்கின்றது. இந்தக் கற்பரசியிடம் இதே பொருளைத்தான் பௌத்த பிக்குணியாகிய 'மணிமேகலை' தமது அமுதசுரபியில் உவந்தேற்கின்றான். அது அமுதம் எடுக்க எடுக்கக் குறையாமல்அருள் சுரந்தூட்டுகின்றது. பௌத்த அறம் வளர்ந்தவாறென்னே! இப்படியான ஒரு பேய்க் கதைக்குச் சங்கப் புலமை பயனபடுமா என்பது சிந்திக்கத்தக்கது

"அறமீனு மின்பமு மீனுந் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்"
"அருளொடு மன்போடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல்"
"பழிமலைந் தெய்திய வாக்கத்திற் சான்றோர்
கழி நல் குரவே தலை"

என்ற திருக்குறள்களைக் கேட்டுத் தலை குத்துத் தீர்ந்த சித்தலைச் சாத்தனரது பொய்யடிமையில்லாத புலமை — பொருட்புலமை, தர்மப்பிறழ்வான ஒரு பேய்கதையைப் பாடியிருக்குமோ என்பது சிந்திக்கத் தக்கது. மணிமேகலை ஆசிரியருக்கும் சங்கப் புலவர்களுக்கும் வெகுதூரம். மணிமேகலை பாடியவர் சங்கப்புலவரானல் சங்கத்திலேயே அரங்கேற்றியிருக்கலாமே!

மணிமேகலையைக் கூலவாணிகஞ் சாத்தன் இளங்கோவடிகள் முன்பும் இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தைக் கூலவாணிகஞ் சாத்தன் முன்பும் அரங்கேற்றினர்களென்று, மணிமேகலைப் பதிகத்திறுதியிலும், சிலப்பதிகாரப் பதிகத்திறுதியிலும் உறுதி முடித்திருக்கிறார்களே!

இரு நூல்களிலுமுள்ள பதிகத்தின் பெருமை இருந்தவாறென்னே! இவருக்கு அவரும் அவருக்கு இவரும் அரங்கேற்றி மகிழ்ந்தனர் போலும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருள் விசாரம் பிடித்த கவிஞர்தான் புலவர்

## சீத்தலைச்சாத்தனார் வேறு கூலவாணிகஞ் சாத்தனார் வேறு

### இளங்கோ அடிகளும் கூலவாணிகஞ் சாத்தனாரும் ஒருவருக்கொருவர் அரங்கேற்ற உதவி

வித்துவான் - பண்டிதர் பொ. கந்தையனார்

கவி புனைபவர்களுக்குக் கவிஞர் என்று பெயர். கவிஞர் இருவகையினர்; எழுத்து, சொல், யாப்பு, தெரிந்தவர்கள் ஒருவகையினர். எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி தெரிந்தவர்கள் இன்னெரு வகையினர்.

எழுத்து, சொல், யாப்பு, தெரிந்த கவிஞர்கள் நல்ல அழகாகக் கவி புனைவார்கள். பொருளைப் பற்றிய கவலை அவர்களுக்குக் கிடையாது. பாட்டு எப்படி? நல்ல அழகான பாட்டா என்பதுதான் அவர்கள் விசாரம். எதுகை மோனை நயங்களோடு கற்பனை நயமும் சேர்ந்துவிட்டால் போதும், அவர்கள் இரசிப்பார்கள் — பாராட்டுவார்கள். எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி தெரிந்த புலவர்களுக்குப் பொருளைப்பற்றிய விசாரந்தான் பெரிய விசாரம். அவர்கள் பொருள், யாப்பு என்று துடிதுடிப்பார்கள். எழுத்து, சொல், யாப்பு, அணிக்குறை விருந்தாலும் பொறுத்துக்கொள்வார்கள். பொருட் குற்றமிருந்தால் அதை அவர்கள் கண்டு சகிக்கமாட்டார்கள். பொருள் விசாரம் பிடித்த கவிஞர்களுக்குத்தான் "புலவர்கள்" என்று பெயர்.

"பொருடெரி புலவ"

பழந்தமிழ்ச் சங்கங்களிலே பொய்யடிமையில்லாத பொருள் தெரிந்த — அறம் பொருளின்பம் வீடு தெரிந்த புலவர்களுக்குத்தான் இடங்கிடைக்கும். பொருளைப் பற்றிய விசாரமின்றி, எதுகை மோனை, அலங்காரங்களோடு வாய்க்கு வந்தபடி கவி புனைபவர்களுக்குச் சங்கத்திலே இடங்கிடைக்காது. இந்தக் காலத்திலே தமிழ்ச் சங்கங்களிலே நாமெல்லாம் அங்கத்துவப்பணம் செலுத்தியோ, செலுத்தாமலோ அங்கத்தவராய்விடுகின்றோம். கண்ணுதற் பெருங் கடவுளும் புலவனுயமர்ந்த பழந்தமிழ்ச் சங்கங்களிலே இந்த இழிதகவுக்கு இடமில்லை; பொருள் வேண்டும் புன்கண்மை ஆண்டில்லை; சங்கப் பலகை இடங்கொடுத்தாலன்றி இடம்பெறமுடியாது.

கடைச்சங்க காலத்திலே, பாண்டி நாட்டிலே ஒரே பெயரையுடைய பலர்வாழ்ந்திருக்கின்றனர். "சாத்தனார்" என்ற பெயர் பெருவழக்காயுள்ள ஒரு பெயர். பாண்டியர் சரித்திரங்களைக் கூறும் சில புத்தகங்களை நான் வாசிக்க நேர்ந்தபோது இதை நன்கு அவதானித்தேன். "சாத்தனார்" என்ற பெயரோடு புலவர்கள் பலர் வாழ்ந்திருக்கின்றனர். அதிகாரிகளும் பலர் வாழ்ந்திருந்கின்றனர். சாத்தனான், சாத்தனார், சாத்தன் கணபதி; ஏனாதி சாத்தஞ் சாத்தன் போன்ற பல பெயர்கள் சங்க காலத்தில் அதிகாரிகளுக்கு வழங்கிய சிறப்புப்பெயர்கள். "சாத்தனேரி" என்ற பெயரையுடைய ஒரு ஊர்கூட இருந்ததாகச் சரித்திரம் கூறும். 'சாத்தனார்' என்னும் பெயர் அந்தக் காலத்தில் நன்கு மதிப்புப்பெற்ற ஒரு பெயர் போலும்.

கடைச்சங்கப் புலவர்களிலே சீத்தலைச் சாத்தனார் என்பவம் ஒருருவர். இவர் நிறைந்த தமிழ்ப் பற்றுள்ளவர்; தமிழ்புலவர்கள் தற்செயலாக விடும் எழுத்து, சொல், யாப்பு, அணிப் பிழைகளைக் கண்டாலே தமது எழுத்தாணியால் தமது தலையிலேயே குத்திக் கொள்பவார் போலும்! நல்ல காலம், சங்கப் புலவர்களாதலால் — பொருள் விசாரம்பிடித்த புலவர்களாதலால் ஒருநாளும் சங்கத்திலே பொருட்பிழை நேர்ந்ததில்லை. அவருடைய தலையிலிருந்து எந்தநேரம் பார்த்தாலும் சீழ்வடிந்துகொண்டேயிருக்கும். சீழ் வடிந்துகொண்டிருப்பதைக் கண்ட ஏனைய புலவர்கள் அவரைச் "சீத்தலைச் சாத்தனார்" என்று மரியாதையாக அழைத்தனர். இந்தச் சீத்தலைச் சாத்தனாருக்கு நெடுங்காலமாகச் சீழ்வடிந்து தலையே அழுகி ஒழுகிக்கொண்டிருக்கும் போது, திருக்குறள் அரங்கேற்றம்

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

## தமிழ்த் தாயைப் போற்றுங்கள்

### தமிழ்ச் சங்கம் நிறுவித் தமிழ்க்கலை வளர்ப்போம்

ஸ்ரீ செ. கோவிந்தசாமி அவர்கள்

உலகில் பல நாடுகளுள்ளும் தமிழ் நாடே சைவம் பரவியிருந்த நாடாகும். தற்போது தமிழ் நாட்டில் பௌத்தம் பரவி இருக்கிறது. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலசற்குருநாத சுவாமிகளுக்குப் பின் அவர் அடிச்சுவட்டைப் பின்பற்றி யாழ்ப்பாணத்திலிருந்து தாய்நாடு சென்ற பெரியார்களான மகாவித்துவான் நா. கதிரைவேற்பிள்ளை, மகான் செந்திநாதையர், ஸ்ரீ அம்பலவாணநாவலர் சுவாமிநாத பண்டிதர் முதலானோர் நாவலர் அடிச்சுவட்டில் சைவத்தொண்டாற்றினார்கள்.

நாம் தமிழ் சைவம் என்று சொல்லும்பொழுது இரண்டும் ஒன்றே. அது பூவும் மணமும் போலவும் நகமும் தசையும்போலவும் உயிரும் உடம்பும்போலவும் அமைந்த ஒரு தெய்வ ஒழுங்காகும். உத்தியோக நிலைமை கருதித் தமிழ் மொழிபற்றி பொய்யுரை பகராமல் உண்மை கருதித் தமிழுக்குப் பணியாற்ற வேண்டும். தமிழில் பேச வேண்டும். எழுதவேண்டும். என்றெல்லாம் பேசுகிறார்கள். நாங்கள் தமிழர்கள் தமிழ்த் தாய் வாழப்பிறந்தவர்கள். ஆனபடியால் தமிழ்த் தாய்க்கே நாம் உயிரை அர்ப்பணம் செய்ய வேண்டும். நமது தமிழ்த் தாய் அகமுகத்தில் சைவத் தாயாகவும் புறமுகத்தில் தமிழ்த் தாயாகவும் விளங்குகிறாள் அகமுகத்தில் நிற்போர் சைவத் தமிழ் அன்னையென்பர். புறமுகத்தில் நிற்போர் தமிழ் அன்னையென்பர். இத்தகைய சீரும் சிறப்பும் வாய்ந்த தமிழ்த் தாயை நாங்கள் போற்றி வாழ வேண்டுமானல் அந்நிய பாஷை அந்நிய நாகரிகம் அந்நிய உணவு, அந்நியஉடை ஆதியனவற்றை எல்லாம் உதறித் தள்ளவேண்டும். ஒவ்வொரு மதச் சார்புடைய தமிழ் மக்களும் தமிழ்த் தாய்க்குத் தொண்டுசெய்து வாழ வேண்டும். ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர்களுக்கு விழாவெடுக்க வேண்டும். ஈழநாட்டுப் புலவர்கள் நினைவாக ஒரு தமிழ்ச் சங்க மண்டபம் நிறுவி அதில் தமிழ்க் கலையை வளர்க்க வேண்டும். தமிழ் வளரச் சைவம் வளரும் சைவம் வளரத் தமிழ்வளரும் என்பதில் ஒருவித ஆட்சேபமும் இல்லை.

## சித்திகளைப் பற்றிய இரகசியம்

### யோகிகள் செய்வது ஒன்று வேடதாரிகள் செய்வது மற்றொன்று

அட்டமாசித்திகள் என்பனவாய்வரும் சித்திகள் எல்லாம் மனம் ஒருவழிப் படுவதலாகின்றன. இவற்றைச் செய்வதற்கு வேண்டப்படும் சக்தி மனத்துக்கு இறைவனிடமிருந்து வருகின்றது.

மனச்சலனத்தாலும், கூடாத எண்ணங்களாலும் பிரமச்சரியம் இன்மையாலும் மனத்தின் சக்தி குறைகின்றது. மனத்திலமைந்துள்ள பெரும் சக்தியை மனத்தை நிலைநிறுத்துதல் நல்லெண்ணங்களை நினைத்தல் என்பவற்றால் அடக்கியாள முடியுமானல் அதிசயமான செயல்களைச் செய்யும் ஆற்றலைப் பெறலாகும் இராச யோகிகளாற்செய்யப்படுவன அட்டமா சித்திகளேயாகும். பிற சிறுச் சித்திகளும் உள. மனம் ஒருவழிப்படும்பொழுது சித்திகள் உண்டாகின்றன. சித்திகளை விரும்பாது தள்ளிவிடுதல் வேண்டும். சித்திகளில் ஆசையுண்டாகுமானல் இலட்சியம் எய்த முடியாததொன்றாகும்.

உயர்ந்த ஆத்மீகப் பொருளைப்பற்றியும் கடவுளைப் பற்றியும் நம்பிக்கை வலியுறும்லொருட்டு உண்மையான யோகிகள் சீடர்களுக்குச் சித்திகளைச் செய்து காட்டுவார்கள். அவர்கள் பொது மேடைகளில் ஏறிச் சித்திசெய்து பொது மக்களுக்குக் காண்பிக்கமாட்டார்கள்.

தமது கணவனுடைய மனக்கண்ணைத் திருப்பிக்கும்பொருட்டு சுடலை இராணி சித்திகளைக் செய்தா. அவ நிலத்திற் கால்மிதியாது நின்று காண்பித்தா. ஆகாயத்தில் உலாவிக் காண்பித்தா. ஸ்ரீ சங்கரர் உருக்கிய ஈயத்தைக் குடித்தார். பரகாயப் பிரவேசஞ்செய்தார். ஸ்ரீ சதாசிவப் பிரமன் ஒரே நேரத்திற் பலவிடங்களில் நின்றுகாண்பித்தார். அவர் காவேரிஆற்றங்கரையிற் பல மாதங்களாகப் புதைக்கப்பட்டிருந்தார். அவருடைய கை வெட்டப்பட்டது. அதை முன்பிருந்தபடி வளரச்செய்தார். அகல்கோட்டுச்சுவாமி என்னைப் பொன்னுக்கினார்.

ஆவிகளின் உதவியைக் கொண்டு சில வேடதாரிகள் சிறு சித்திகளைச் செய்கிறார்கள். ஆன்மார்த்த சாதனைகளுக்கும் அவற்றுக்கும் தொடர்பில்லை. ஆணிகள், போத்தல் துண்டுகள் முதலியவற்றை உட்கொள்ளுதல், நெருப்பில் நடத்தல் போன்ற செயல்கள் யோகிகளின் சித்திகள் போன்றவை அல்ல. இச்செயல்களுக்கும் யோகத்துக்கும் எவ்வித தொடர்புமில்லை. இக்காட்சிகளைக்கண்டு கற்றவர்களும் மயங்கி விடுகிறார்கள்.

செபத்தாற் சித்திகள் செய்யப்பெற்றிருக்கின்றன. உண்மையான பக்தர்களின் வேண்டுதல்களை இறைவன் என்றென்றும் ஈந்தருளி வருகின்றார். கடவுள் நம்பிக்கையே எல்லாவற்றிலும் மேலான சித்தியாகும். தண்ணீரைத் திராட்சரசமாக்குதல் செயற்கருஞ் செயலல்ல. ஆனல் உலகப் பொருட் பற்றுள்ள மக்களின் மனங்களைமாற்றி யோக மார்க்கத்திற் செலுத்துதல் மிகக் கடினமான செயலாகும். இதுதான் எல்லாவற்றிலும் மேலான சித்தியாயிலங்குகின்றது.

சித்திகள் என்றென்றும் யுகங்கள்யுகங்களாய்ச் செய்யப்பட்டு வருகின்றன. உலக அழிவு வரும்வரையும் அவை அப்படியே செய்யப்பட்டு வரும். சித்திகள், சாதாரண மனிதனுக்கு அதிசயமானவையாகத் தோன்றும். யோகிகளுக்கு அவை சிறுக் கருமங்களாகும். யோக சாதனை விதிகளை அறிந்து இயற்கைச் [illegible]தியைக் கையாண்டவர்களுக்குச் சித்திகள் சர்வ சாதாரண செயல்களாகின்றன.

(ஸ்ரீ சுவாமி சிவானந்தா அவர்கள் எழுதிய ஆங்கிலக் கட்டுரையின் சாரம்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேயர்கள் நெஞ்சம்

# அவசியந் தேவையான இரண்டு பிரயாண வசதிகள்

புகையிரதப் பிரயாணிகளுக்கு வேண்டப்படும் இரு அவசிய தேவைகளைப்பற்றி அரசாங்கம் உடனே ஆலோசிக்க வேண்டியதாயிருக்கின்றது.

அவற்றுள் முதலாவது திருக்கேதீச்சரத்தில் ஓர் புகையிரத நிலையம் அமைத்தலாகும். புகையிரதம் தங்கும் நிலையமாய் இப்பொழுதுள்ளதுபிரயாணிகளின் தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியாததொன்ருயிருக்கின்றது. மிக முக்கியமான புனித யாத்திரைத் தலங்களுள் ஒன்ருய் விளங்குகின்றது திருக்கேதீச்சரம். வருடந்தோறும் செல்லும் யாத்திரிகர்களின் தொகை மேன்மேலும் கூடிக்கொண்டே போகின்றது. ஓர் புகையிரத நிலையம் அமைத்தல் இவ்வாறு பெருந்தொகையாகச் செல்லும் யாத்திரீகர்களுக்கு வேண்டிய வசதியைக் கொடுக்கக் கூடியதாயிருக்கும். அத்துடன் அரசாங்க வருமானமும் அதிகரிக்கும்.

தலைமன்னரிலிருந்து யாழ்பாணம் கொழும்பு முதலிய இடங்களுக்கும் அவ்விடங்களிலிருந்து தலைமன்னருக்கும் ஞாயிற்றுக்கிழமைகளில் இரவில் ஓடும் புகையிரதம் இப்பொழுது நிறுத்தப்பட்டுள்ளது. இது பழையபடி ஓடச் செய்யவேண்டிய அவசிய தேவை இப்பொழுதுண்டாயிருக்கின்றது. மன்னர் போன்ற விசேட இடங்களும் • தலைமன்னர்ப் பாதையிலிருக்கின்றன. திருக்கேதீச்சரம், மடு போன்ற தலங்களுக்கு ஞாயிற்றுக்கிழமை சென்று அன்று இரவுதிருப்புவதற்கு மக்கள் பலர் விரும்புவார்கள்.

இவை இரண்டும் போக்குவரத்து மந்திரியால் உடனே ஆலோசிக்கப்பட வேண்டிய விஷயங்கள். மன்னர்ப் பிரதிநிதி திரு. அழகக்கோன் இவைபற்றி அரசாங்கத்துக்கு எடுத்துக்கூறியுள்ளார் என்பது களிப்பூட்டும் ஓர் செய்தியாயுள்ளது. சித்தியடையும் வரையும் வழக்கமான உற்சாகத்துடன் இக்கருமங்கள்பற்றி மேலும் செயலாற்றுவார் என்று மக்கள் நம்புகின்றனர்

எஸ் சிவசுப்பிரமணியம்

கொழும்பு
17—8—57.

# பெற்ருர் தினக் கொண்டாட்டம்

தட்டாதெரு இந்து - தமிழ்க் கலவன் பாடசாலையின் பெற்ருர் தினக்கொண்டாட்டம் பாடசாலைமண்டபத்தில் வட்டார வித்தியாதரிசி திரு. R. திருநாவுக்கரசு B. Sc, Dip-in-Ed. அவர்கள் தலைமையில்நடைபெற்றது. அவ்வமையம் வித்தியாசாலைத் தலைமையாசிரியரின் நன் முயற்சியால் பாடசாலை அடைந்த முன்னேற்றங்களையும் புறவேலைகளையும்பற்றிய விரிவான அறிக்கை வாசிக்கப்பட்டது

தலைவர்பாடசாலை அடைந்து வரும் முன்னேற்றம் முகாமைக்காரரின் முயற்சி பெற்ருரின் ஒத்துழைப்பு, ஆசிரியர்களின் இடைவிடாத ஊக்கம் ஆகியவைகளைப் பாராட்டி மாணவர்களுக்குத் தற்காலம் அளிக்கப்பட்டு வரும் கல்வியின் மாறுதல்களையும் அவற்றின் சிறப்புக்களையும்மதக் கல்வியின் முக்கியத்தையும் எடுத்துக் கூறினர். இப்பாடசாலையில் நடத்தப்படும் மதக் கல்வி சிறந்த முறையில் அமைந்திருப்பதாகவும் இதைத் தொடர்ந்து பெற்ரோரும் தங்கள் வீடுகளில்கவனஞ்செலுத்த வேண்டுமென்றும் ஆலோசனை கூறினர்.

பாடசாலை மாணவர்களால் தமிழ் ஆங்கிலம் ஆகிய இரு பாஷைகளிலும் உபந்நியாசம், சம்பாஷணை, வாணி நடனம், கிராமிய நடனம்,பாலர்நடனம்,பரத நாட்டியம், கோலாட்டம் முதலான நிகழ்ச்சிகளும் ஔவையார் நாடகமும் நிகழ்த்தப்பட்டன.

நேயர்கள் நெஞ்சம்

ஆசிரிய அன்ப,

## மாசி உத்தரமே!

—0—

தங்கள் இந்துசாதனத்திற்கு எமது இதையாஞ்சலி. தமிழன்பர் பலர் தங்கள் பத்திரிகை வாயிலாக மாசி உத்தரமே திருவள்ளுவர் தினம் என்பதை நிருபித்துவிட்டனர். அவர்கள் எல்லோருக்கும் தனித்தனி இதயாஞ்சலி. இனி எந்தத் தமிழ் மகனும் வைகாசி அனுஷத்தில் வள்ளுவன் விழாக் கொண்டாட முன்வரமாட்டான். ஆகவே இனிமேலாகுதல் தமிழ் மறைக் கழகத்தார் தங்கள் பிழைக்கிரங்குவார்களா? மாசி உத்திரத்தில் கொண்டாடுவார்களா?

இங்ஙனம்
வ. நடராசா

யாழ்ப்பாணம்
14-8-57.

# பொருள்விசாரம்பிடித்த கவிஞர்தான் புலவர்

3-ம் பக்கத் தொடர்ச்சி

நிகழ்ந்தது. அரங்கேற்றம் முடிந்ததும் ஒரு பேரற்புதம். சீத்தலைச் சாத்தனர் எங்கே! எங்கே! என்று எல்லாரும் தேடுகிருர்கள். ஒருவர் "பாமுறை தேர் வள்ளுவர் முப்பால்" என்று பாடி முடிக்கின்ருர் ஆள் யாராயிருக்கலாம்!

திருவள்ளுவரிலே எழுத்து, சொல், பொருள், யாழ்ப்பு, அணி வழுவே கிடையாது. மருந்து அது. சீத்தலைச்சாத்தனருடைய தீராப்பிணிக்கே மருந்தாய் விட்டது. சங்கப் புலவர்களுள்ளே இவர் ஒரு புறநடையான புலவர்.

பெருந்தலைச் சாத்தனர், ஒக்கூர்மாசாத்தனர், மோசி சாத்தனர், முது கண்ணன் சாத்தனர், கதப்பிள்ளை சாத்தனர், வடவண்ணக்கன் பெருஞ்சாத்தனர், ஆடுதுறை சாத்தனர் முதலிய வேறுபல புலவர்களும் "சாத்தனர்" என்ற பெயரோடு சங்கப் புலவர்களாக இடம் பெற்றிருக்கின்றனர்.

"சாத்தனர்" என்ற பெயரோடு, எழுத்து, சொல், யாப்பு, அணி தெரிந்த சாதாரண கவிஞ[illegible]ளும் பலர் வாழ்கின்றனா. அவர்களுக்குச் சங்கப்பலகை இடமளித்திலது போலும்! அவர்களிலொருவர்தான் கூலவாணிகஞ் சாத்தனர். கூலம்—சிறுதானியம். கூலவாணிகஞ் சாச்தனர்—சிறுதானிய வியாபாரஞ் செய்யும் சாத்தனர். இவர் வியாபார நோக்கமாச் சேரநாட்டுக்குச் சென்றிருக்கலாம். சேரநாட்டில் பாண்டி நாட்டுக் கவிஞர்களுக்கு நல்ல மதிப்பு. இவர் சேரன் செங்குட்டுவனைச் சந்தித்த சந்தர்ப்பம் சிலப்பதிகாரச் சந்தர்ப்பம்.

இக் கூலவாணிகன் சாத்தனைச் சங்கப் புலவன் சீத்தலைச் சாத்தனர் என்று பெரிய பெரிய ஆசிரியர்களே மயங்குகின்ருர்கள். 'சீத்தலை' என்னும் பதத்திற்குச் 'சீத்தலை' என்பது இடப்பெயர் என்று காரணங் காட்டுகின்றனர்.

தொல்காப்பிய உரையாசிரியராகிய இளம்பூரணர், தொல் - சொல் -பெயரியல் இருபதாஞ் சூத்திரத்துக்கு உதாரணம் காட்டும்போது சீத்தலைச்சாத்தனர் சினைப் பெயரோடு தொடர்ந்துவிடும் முதற்பெயர் என்று குறிப்பிட்டுள்ளார். இளம்பூரணர் சீத்தலை சினைப் பெயரென்று குறிப்பிட்டது சிந்திக்கத் தக்கது.

சீத்தலைச் சாத்தனரால் பாடப்பட்ட ஒரு பாடல் புறநானூற்றில் (59ம்பாடல்) வருகின்றது. கலாநிதி உ. வே. சாமிநாதஐயர் அவர்கள் மதுரைக் கூல வாணிகன் சீத்தலைச் சாத்தனர் பாடியது என்று குறிப்பிட்டுள்ளார். ஐயர் அவர்கள் சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் தருணம் வாய்க்கும்போது சீத்தலைச் சாத்தனரும் மதுரைக் கூலவாணிகஞ் சாத்தனரும் ஒருவர் என[illegible] மிக வலிந்து [illegible] முயன்றிருக்கிருர்.

புறநானூற்றுக்கு மிக அண்மையில் விளக்கவுரை எழுதிய வித்துவான் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள் புறநானூற்றிலுள்ள 59ம் பாடலுக்குத் தாமெழுதிய விளக்கவுரையில்; "மணிமேகலை பாடிய ஆசிரியரும் இவரேயென்பது பெயரளவில் நோக்குமிடத்துப் புலனுகும். மணிமேகலையாசிரியர் காலத்துப் பாண்டி வேந்தன் இவனல்லனென்பது சிலப்பதிகாரத்தால் இனிது விளங்குதலின், இச் சீததலைச் சாததனர் வேறென்பது புலனுகும்" என்று குறிப்பிட்டிருக்கின்[illegible]

தொடர்ச்சி 5-ம் பக்கம்

# மற்ருெருகூட்டறிக்கை

பண்டாரநாயக - செல்வநாயகம் ஒப்பந்தம்பற்றி அவர்கள் இருவரும் மற்ருெரு கூட்டறிக்கை வெளியிட்டிருக்கின்றனர்.

அரசாங்கத்துக்கும் தமிழரசுக் கட்சிக்குமிடையில் தோன்றிய பிழையான கருத்துக்கள்பற்றி நாங்கள் ஆராய்ந்தோம். பிழையான எண்ணங்கள் தோன்றிய பொருள்களில் வேறுபாடான கருத்திருக்கவில்லை என்று கருதுகின்ருேம்.

பாராளுமன்றத்தில் 25-4-57ல வெளியிட்ட நாலம்சத் திட்டத்தின்படியும் 26-7-57ல் வெளியிட்ட கூட்டறிக்கையின்படியும் மொழிக்கொள்கை அமையும்.

குடியேற்றத் துறையில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ்மக்களைப் பாதிக்கும் முறையில் சிங்கள மக்கள் பெரும்பான்மையினராகச் செய்யப்படமாட்டார்கள்.

சீர்கிலைகள் ஒரு பிரதேச சபை எல்லைக்குள் இருக்க குடியேற்றத் திட்டம் மற்ருெரு பிரதேச சபை எல்லைக்குள்ளாயிருக்கும்பொழுது மத்திய அரசாங்கமும் குறித்த பிரதேச சபைகளும் ஏற்றுக் கொள்ளக்கூடிய முறையிற் செயலாற்றப்படும்.

ஒப்பந்தம் முறிந்துவிட்டதென்பது சரியல்ல. விவரமான சட்ட திட்டம் வெளியாகும்வரையும் யாவரையும் பொறுமையாயிருக்கும்படி கேட்டுக்கொள்கிருேம் என்பது அவர்கள் வெளியிட்ட இரண்டாவது கூட்டறிக்கை.

## தகுதி வாய்ந்த தமிழ்ச் சர்வகலாசாலை வேண்டும்

தமிழ்க்கல்வியையும் பண்பாட்டையும் பாதுகாப்பதற்குத் தகுதிவாய்ந்த தமிழ்ச் சர்வகலாசாலை வேண்டும். தமிழ்ப்பண்பாடு மணம் கமழாமையால், பேராதனைச் சர்வகலாலைத் தமிழ் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய மாட்டாது. உத்தியோகங்களுக்குப் படிக்கக் கூடியதும் கல்வித் தகுதிப் பாடங்கள் அளிக்கக்கூடியதுமான தமிழ்ச் சர்வகலாசாலை ஒன்று அமைக்கப் பெறுதல் வேண்டும். அது, முதல் மந்திரி எடுத்துக்காட்டியவாறு வடக்கு அல்லது கிழக்குமாகாணத்தில் அமைதல் வேண்டும் என்று சர்வகலாசாலை இயக்கத்தார் தீர்மானித்திருக்கின்றனர்.

—0—

## மட்டகளப்புக் கச்சேரி உதவியதிகாரிக்குப் பிரியாவிடை

:0:

அரசாங்கத்தில் 40 வருட சேவை புரிந்து இளைப்பாறிய மூகாந்திரம் சுப்பிரமணியம் அவர்களுக்குக் கச்சேரி உத்தியோகஸ்தர்கள் ஒரு சிறந்த பிரியாவிடை அளித்தனர். வியாழக்கிழமை திரு. ஏ. பி. எஸ் என் புள்ளைநாயகம் அரசாங்க அதிபரின் குழுவுக்கும் மூகாந்திரம் சுப்பிரமணியத்தின் குழுவுக்கும் இடையில் ஒரு உதை பந்தாட்டம் நடைபெற்றது. வெற்றியடைந்த மூகாந்திரம் சுப்பிரமணியத்தின் குழுவுக்கு திரு எல். சி. அருளபிரகாசம், உதவி அரசாங்க அதிபர் வெள்ளிக் கிண்ணத்தை அளிக்கையில் மூகாந்திரத்தின் உயர்ந்த சேவை, நேர்மைத் திறமை, புத்திக் கூர்மை முதலிய குணதிசயங்களைப் புகழ்ந்து பேசினர். சனிக்கிழமை திரு. புள்ளைநாயகம் அரசாங்க அதிபர் மூகாந்திரம் சுப்பிரமணியத்தின் படத்தை திரைநீக்கம் செய்து அன்னர் அரசாங்க சேவையில் ஒரு எடுத்துக் காட்டாக விளங்கினர் என்றும் எல்லோரும் அவரைப் பின்பற்றினல் வாழ்க்கையில் வெற்றி காணலாம் என்று புகழ்ந்தும் கூறினர். ஞாயிற்றுக்கிழமை கச்சேரிப் பொது நலசங்கத்தார்பாசிக்குடாக் கடற் கரையில் மூகாந்திரத்துக்கு ஒரு விருந்து உபசாரம் அளித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

—0—

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டில்
இல. MB 1367,
உரும்பிராய் தெற்கு
1. கார்த்திகேசு மகேசனும் பெண்
2, ஜெயமணி
—வழக்காளிகள்.
எதிராக
யாழ்ப்பாணம் நாவாந்துறை ரோட் சுல்தான் அப்துல்காதர் கபீட் முகமட் —எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் MB 1367 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஓர் துண்டுக் காணி 1957ஞூ புரட்டாதிமீ 24உ செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 2767-50 ம். இன்னும் ரூபா 2000/- த்திற்கு 28-11-56 தொடக்கம் 5-3-57 வரையும் 100க்கு 9 வீத வட்டியும் பின்பு கூட்டுத்தொகைக்கு இறுபடும் வரைக்கும் 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபா 214 - 42 சதமும்.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணைக் கோயிற்பற்று வண்ணார்பண்ணை மேற்கிறை ஆயிலடி நி. பர 1-ம் குளி 12-ம் பயிர்வகைகளும் கிணற்றுப்பங்கும். எல்லை கிழக்கு முகிதீன் சாகிப் முகமட் மீரா சாகிப்பின் ஆதனம், வடக்கு சுல்தான் அப்துல்காதார் கபீட் முகமட்டுக்கும் மறுபேருக்கு முரிய ஆதனம், மேற்கு கை ஒழுங்கையும் நயினப்பீடமரக்காயர் முகமட் மீரா சாகிப்பின் ஆதனமும், தெற்கு சின்னத்தம்பி பெண் சின்னப்பிள்ளைக்கும் மறுபேருக்கும் முகமட் சுல்தான் பெண் முகமட் சுல்தான் பீவிக்கும் உரிய ஆதனங்கள் இதடங்கலும்.

சே. இரத்தினசபாபதி
கொம்மிஷனர்

24, சப்பெல் வீதி,
யாழ்ப்பாணம்
12-8-57,
M. 94 23-8-57.

## Commission Sale

### விற்பனவு விளம்பரம்

—0—

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டு வழக்கு இல. 5533

வழக்காளி:-கற்கோவளம் E. கந்தப்பர் செல்லையா

எதிராளி:- கரணவாய் வடக்கு கந்தையா தாமோதரம்பிள்ளை

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வையின்படியும் குறித்த கோட்டார் எனக்கனுப்பிய கொமிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ்க் காணும் ஆதனம் 1957-ம் ஆ புரட்டாதி மீ 19-ந் திகதி (19-9-57) வியாழக்கிழமை பிற்பகல் 3-30 மணி தொடக்கமாக குறித்த ஆதனவிடமாக விருந்து என்னல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோயிற்பற்று கரணவாய், வீரபத்திராயன் குறிச்சி திலக்கந்தை நிலப்பரப்பு 800 இதில் நடுப்புறமாக நிலப்பரப்பு 450 இதில் மேற்குப் புறமாக நிலப்பரப்பு 100, இதில் மேற்குப் புறமாக நிலப்பரப்பு 30. எல்லை கிழக்கு எதிராளி. கந்தையா தாமோதரம் பிள்ளைக்குரியவாதனம், வடக்கும் மேற்கும் அந்தோனிப்பிள்ளை மனுவேல்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய வாதனம், தெற்கு குருசாமிப்பிள்ளை பெண் ஆறுசிப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் அடங்கலும் A 397-253இல் பதியப்பட்டது.

| | | |
|---|---|---|
| தீர்வைத்தொகை | ரூ | 2326-00 |
| 6-9-56 தொடங்கி 17-1-57 வரை ரூ. 1500க்கு 10 சதவீத வட்டி | ரூ | 50 00 |
| 17-1-57 தொடங்கி 2.8 57 வரை 5 சதவீத வட்டி | ரூ | 69 30 |
| கோட்டுச்செலவு பிறகீங்கலாக | | |
| | | 2445-30 |

வி. முதலியார் குழந்தைவேலு
(கொமிஷனர்)
பருத்தித்துறை
30-7-57
M 92 23-8-57

## கோட்டு விற்பனவு விளம்பரம்

காரைநகர் மேற்கு அம்பலவாணர் தம்பிப்பிள்ளை
வழக்காளி
இல. M. B. 1276
எதிராக
காரைநகர் மேற்கு முருகர் கைம்பெண் சேதுப்பிள்ளை இவ காலஞ்சென்ற சோமநாதர் நல்லதம்பியின் ஆதனத்துக்கு தத்துவ காரியாகவும் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டு 47-ம் உரிமைத் தத்துவ வழக்கில் காலஞ்சென்ற சோமனுதர் நல்லதம்பி பெண் மீனுட்சிப்பிள்ளையின் ஆதனத்துக்குத் தத்துவகாரியாகவும்
— எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B, 1276-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1957 ஞூ புரட்டாதி மீ 20 உ வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை முதல் வட்டி ரூபா 1902 ம் இதில் ரூபா 1500 க்கு 19-10-56 திகதி தொடக்கம் 25-3-57 வரைக்கும் வருடமொன்றுக்கு 5 வீத வட்டியும் அதன் மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு 389-04.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக்தீவுப்பகுதி காரைதீவுக் கோவிற்பற்று வலந்தலை இறை பள்ளம்புலம் மணற்காடுநிலப்பரப்பு 6 குழி 11 1/4 ம் வீடும் பனைகள் வடலிகள் மற்றுமதைச் சேர்ந்தவைகளும், எல்லை கிழக்கு கந்தப்பு பொன்னையாவும் பரமனுதன் பெண் அன்னம்மாவும் கதிர்காமர் தம்பையாவும் வடக்கு கதிர்காமர் தம்பையாவும் முருகேசு பெண் இலட்சுமியும் இராமனுதர் சின்னத்தம்பியும் மேற்கு நாகலிங்கம் பெண் பூமலரினதனம் தெற்கு ஒழுங்கை இதடங்கலும்-

ஆ ச. கந்தையா
கொம்மிஷனர்

காரைநகர்
5-8-57.
M95. 23-8

## விளம்பரம்

பருத்தித்துறை
டிஸ்திறிக் கோட்டில்
இல: Mis 45
சென்னை
இந்து-இலங்கா புறவிடென்ட் இன்சூரன்ஸ் கொம்பனி லிமிட்டட் வகையிலும்

1938-ம் ஆண்டின் 51-ம் இலக்க கொம்பனிச் சட்ட முறைப்படியும்

இதன் பின்னற் காணப்படும் ஆதனம் 1957-ம் ஆ புரட்டாதிமீ 14-ம்உ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் குறித்த காணியினிடமாகவிருந்து என்னுற் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

ஆதனம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கரைச்சிப் பகுதி, கரைச்சிப்பற்று பன்றிசுட்டான் குறிச்சி, வலுப்பத்து வயல் நெற்பரப்பு 250, ஆனல் ஆட்சிப்படி நெ, ப. 300. எல்லை கிழக்கு தண்ணீர் வாய்க்கால், வடக்கு வேதவனக்குருக்கள் மாணிக்கவாசகக் குருக்களுக்கும் மறுபேருக்குமுரிய வாதனம், மேற்கு சுப்பர் கந்தப்பரின் உரிமைக்காரருக்கும் மறுபேருக்குமுரிய வாதனம், தெற்கு வறணி இயற்றாலை தும்புருவணிப் பிள்ளையார் கோவிலுக்கும் கந்தர் சின்னையாவுக்கும் மறுபேருக்குமுரிய வாதனம். இவ்வெல்லைக் குட்பட்டவையடங்கலும்.

சு. நடராசசிங்கம்
புலோலி மேற்கு,
பருத்தித்துறை,
19-8-57.
M 93 23-8-57

## மாணக்கர் மதிவள மன்றம்

2-ம்பக்கத் தொடர்ச்சி

அடுத்தது 42வது திருமுகங்கொடுத்த படலப்: திருமுகங் கொடுத்த படலத்தின் சுருக்கத்தை யான் கூறுவேன். கேட்டு அவதானித்துக்கொள்ளுங்கள்.

பாணபத்திரன் பொருட்டுச் சிவபெருமான் விறகு சுமந்து அவனுக்கருள் புரிந்தமையறிவீர்களல்லவா? (ஆம்)

இந்தப் பாண பத்திரன் சோமசுந்தரக் கடவுளுடைய திருக்கோவிலிலே முப்பொழுதும் சென்று இசை பாடும் நியமம் பூண்டான். வேறு தொழில் அவனுக்கு இல்லை. அதனல் அவன் வறுமையடைந்தான். பாண்டியனுடைய திரவியசாலையிலுள்ள பொருள்களைக் கவர்ந்து சோமசுந்தரக் கடவுள் அவனுக்குக் கொடுத்தார். சிறிது காலஞ் செல்ல அவன் மீண்டும் வறுமையடைந்தான். சிவபெருமான் அவனுக்குச் சொப்பனத்திலே தோன்றி 'இப்பொழுது ஓரோலை எழுதித் தருவோம், சேரமானிடங் கொண்டு போ" என்று எழுதிக் கொடுத்து மறைந்தருளினர்.

(வளரும்)


யாழ்ப்பாணம்

# ஐக்கிய இலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா
**616313,00**
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

தினசரிப் பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்

Std 14


# உங்கள் நக்ஷத்திரம்? எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

[ இவ்வாரப் பலன்கள் 25—8—57 —— 31—8—57. ]

மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

தேகசுக விபரீதம் தொடரும், உடம்பில் உட்டணம் கூடுதலாக உண்டாகக்கூடும், அனேக கண்டனங்களுக்காளாகவேண்டிவருவதோடு தேவையில்லாத குற்றச்சாட்டுகளும் உம்மீது சுமத்தப்படும். குடும்ப அலுவல்களும் அதிருப்தியாகவே தொடரும். சனிக்கிழமையைக் கவனமாய்க் கழிக்கவும்.

இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,

இவ்வாரம் பண இலாபம் நிச்சயம். பழைய நண்பர்களால் அதிக நன்மை ஏற்படும். எதிரிகள் தலையெடுக்கமாட்டார்கள். புதுமுயற்சிகளிற் சிலகாலத்துக்கு அவதானமாகவே இருத்தல் வேண்டும்,

மிதுனராசி மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை; புனர்பூசம் 1, 2, 3, 1ம் பாதம்.

எதிர்ப்பு மெல்ல விலகிவிடும். நண்பர்கள் பாடுபட்டு மேலதிக உதவிககு வருவார்கள். பணநிலையும் விருத்தியடையும். ஆரம்பத்தில் எழும் தடைகளாலே தளர்ச்சியுருது முயற்சிகளைத் தொடர்ந்து செய்யவும்.

கடகராசி புநர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்,

நண்பர்களுடனும் சுற்றத்தவர் [illegible] மன அமைதி இருக்கமாட்டாது. தாய் வழிச் சுற்றத்தவர்களாலே தொந்தரவுகள் காணப்படும். உடம்பு நிலையும் அவ்வளவுதிருப்தியாகமாட்டாது,

சிங்கராசி மகம், உத்திரம் பூரம், 1ம் பாதம்,

தேகசுகம் தளம்பக்கூடும். சடுதியிற் சினங்கொள்ளும் தன்மையுண்டாகும். பண வழியில் நன்மையான வாரம். தீர்க்கப்படவேண்டியபிரச்சனைகள்முடிவுக்கு வரும், வார இறுதியிற் சுற்றத்தவர்களுடன் பிணக்கு ஏற்படக்கூடும்.

கன்னிராசி உத்திரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

வழமையிலும் பார்க்கச் செலவு அதிகரிக்கும். உடம்பு நிலை திருப்தியற்றதாகவே யிருந்து வரும். மனததிற் றடுமாற்றமும் ஏற்படக்கூடும், எவ்வழியிலும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு இயலாதுவிற்பீர்,

துலாம், சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

செலவு அபாரமாக ஏற்றமாயிருக்கும், குடும்பச் சூழலிலே தப்பபிப்பிராயங்கள் தோற்ற இடமுண்டு, புதுமுயற்சிகள் விரும்பிய பயனைத் தரா. சுற்றத்தவர்களாலே தொந்தரவு உண்டாகக்கூடும்,

விருட்சிகராசி விசாகம் 4.ம் பாதம் அநுஷம், கேட்டை.

பிதா வழிச் சுற்றத்தவர்கள் சிறு தொல்லை யுண்டுபண்ணுவார்கள். மற்றும்படி இவ்வாரம் [illegible]ளாவுக்கு நன்மையாகவே முடியும். பண இலாபத்திற் கீர்த்தியையும் எதிர்பார்க்கலாம்.

தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1ம் பாதம்,

பணத்துறையிலிவ் வாரம் நன்மைதரும். புதுமுயற்சிகளைத் தொடக்குவது சுலபமாயிருக்கும். வேலை அதிகரிக்கும். ஆனல் இலாபமும் போதியளவு இருக்கும். சுற்றத்தவர்கள் தொந்தரவுசெய்யக்கூடும்,

மகாராசி உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்,

உத்தியோகமுறையிலேதொல்லைகள் உண்டாகலாம். அநேக பிரச்சனைகள் எழும் எனினும் நன்மையாகவே முடிவுஏற்படும். ஞாயிறும் திங்களும் உமது அலுவல்களில்அவதானமாயிருக்கவும்.

கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

குடும்ப அலுவல்கள் அதிக யோசனையைக்கொடுக்கும். மனம் நிம்மதியாயிருக்கமாட்டாது, ஆனல் பணத்துறையில் இவ்வாரம் நன்மையளிக்கும். மறுபாலாரில் நண்பர்களால் இலாபமும் நன்மையும் எதிர் பார்க்கப்படலாம், செவ்வாயும் புதனும் கவனமாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி

வியாழன்வெள்ளி தவிர ஏனைய நாட்கள் நன்மை தரும் முயற்சிகளை ஆரம்பித்து நடப்பிப்பது சுலபமாயிருக்கும், கீர்த்தியும் எதிரிகளின் தோல்வியும் நிச்சயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுருகன் இளமை வனப்பு

——————0—0——————

1-ம் பக்கத் தொடர்ச்சி

ருந்தது. முகம் கோடி சூரியப் பிரகாசமாக விளங்க ஒரு திருக்கரம் ஆகாயத்தைச் சுட்டி நிற்க மற்றொரு திருக்கரம் தொழிலின்றி மருங்கு கிடப்ப அழகனைத்துந் திரண்டு ஒருருவெடுத்தாலொப்பத் திகழ்ந்து மன்னிய திருவுருவத்தைக் கண்டு மகிழ்ந்த முனிவரர்.

உலகிரு ளகற்றப் பலகதிர்
பரப்பி, யொப்பிலா
வனப்பொடு விளங்கிப்
பொலிவுறு முகமுந் தெறுகதிர்
வெம்மை, போக்குதற்
கெண்ணிவிண் படர்ந்து
செலுமுனி வரரைப்புரந்தபொற்
கரமுந், திருநகை முறுவலு
மருங்கிற்
குல்விய கரமுங் கண்டுகண்
டுவந்தேன், குமரநா
யகன்றிருக் கோலம்.

எனத் துதித்து அப்பால் நோக்கினுர். சிறிய யானைக் கன்றின்மே லிவர்ந்து ஒரு திருக்கரமானது தொடைமிசையமர மற்றொரு திருக்கரத்தில் அங்குசத்தைத் தாங்கி வேண்டுவார் வேண்டும் வரங்களைக் கொடுத்து வருகிற இளந்திருக் கோலத்தைக் கண்டார். கண்டுமன முருகி,

விழைபவர் விழையும் வரங்களை
யளிக்க, விரும்பிய
திருமுகப் பொலிவை
அழகிய தொடையி லமைத்த
பொற் கரத்தை, யங்குசந்
தாங்கிய கரத்தை
மழகளி றூர்ந்து வருதிரு வுருவ
வனப்பினை நினைக்குமெல்
லையிலே
குழைவுறு மனத்தேன் கண்டு
கண் டுவந்தேன், குமரநா
யகன்றிருக் கோலம்.

எனத் துதித்து மற்றொரு புறம் நோக்கினுர். நிலத்திற் படுத்திருந்த சிங்கக் குருளையொன்றின்மே லிருந்துகொண்டு ஒரு திருக்கரத்தில் ஒரு சிறிய வேலும் மற்றொரு திருக்கரத்தில் வட்டமாகிய சிறிய பரிசையும் ஏந்தித் தென்றிசை நோக்கிச் சற்றுத் தூரத்திலே வேதநெறி வழுவா அந்தணர் வளர்க்கும் வேள்வித் தீயினைப் பார்த்தவண்ணமாக இருந்த இளந் திருக் கோலத்தைக் கண்டார். கண்டு அன்பினுல் அகங் குழைந்து,

மந்திர விதியின் மரபுளி வழாது
மாமறைத் தீயினை வளர்க்கும்
அந்தணர் வேள்வி புரந்தரு
ளிறையை
யந்தரத் தமரர்கள் வாழக்
சுந்தரப் பரிசை யயிற்படை
யேந்துந்
துணைக்கரத் தெழிலுரு
நிறைவைக்
கொந்தவிழ் பொழிலிற் கண்டு
கண் டுவந்தேன்
குமரநா யகன்றிருக் கோலம்

எனத் துதித்துச் சரவணப் பொய்கை நடுவண் நோக்கினுர். ஆங்கு அலர்ந்திருந்த வெள்ளைக் கமலமொன்றின் மீது பதுமாசனமிட்டுக் கண்மூடி மவுனமாகவிருந்த இளந் திருக்கோலத்தைக் கண்டார். இந்தத் திருவுருவத்தின் திருமுகம் கலை நிறைந்த சந்திரனென்னத் தண்கதிர் பரப்பியது. ஒரு திருக்கரம் சின்முத்திரை விளங்க மார்பில் வைக்கப்பட்டிருந்தது. மற்றொரு திருக்கரம் மார்பிலே தாழ்ந்த மாலையைப் பற்றிய வண்ணமாக விருந்தது. முனிவரும் நெஞ்சு நெக்குருகி,

அளிமிகு மியல்பா லருமறைப்
பொருளும், ஆகமத்
துட்பொருண் முடிபும்
தெளிவுறின் மவுன மெனுந்திரு
முகமும், சின்மய
மிதுவெனக் காட்டும்
ஒளிமிகு கரமும் மார்பினன்மாலை
யுற்றபொற் கரமுமா
யொளிரக்
குளிரிதழ் மலர்மேற் கண்டுகண்
டுவந்தேன், குமரநா
யகன்றிருக் கோலம்.

என்னத் துதித்து மெய்ம்மறந்து நின்றனர். சிறிது நேரத்திற்றெளிந்து மற்றொரு திசையை நோக்கினுர் மயில் வாகனத்தி லிவர்ந்து வருகிற இளந்திருக்கோலத்தைக் கண்டார். பால்மணம் மாறுத் திருமுகத்திலே வெகுளி தோற்றியது. தொடியணிந்த ஒரு கை சுழன்று களவேள்வி செய்யும் முத்திரையைக் காட்டியது. மற்றொரு கை மணியை யசைத்து ஒலியுண்டாக்கியது. இத் திருவுருவத்தைக் கண்ட முனிவர்,


விரைவினிற் செல்லுங்
கழிமயி லேறி
விளங்கின வுருவின தெனினும்
பரிவொடு கறுவுந் திருமுக
வனப்பும்
படுமணி யிரட்டிய கரமும்
திருநிறை தொடியோ டெடுத்த
பொற் கரமுஞ்
சிந்தைநொந் தலைபவர்ப்
புரக்குங்
குரைகழற் பொலிவுங் கண்டு
கண் டுவந்தேன்
குமரநா யகன்றிருக் கோலம்

என்று துதித்து மற்றொரு திசையைநோக்கினுர். அன்பேயுருவாய திருமுகத்திற் புன்னகையரும்ப மார்பிலே சந்தனமும் முத்துமாலையும் பொலிய மழலைக் குழவிப் பருவத்தோடு மணமகனுருவமும் விளங்க மலர்மாலைகளையெடுத்துத் தம்மை வணங்கி முன்னிற்கின்ற தெய்வப் பெண்களுடைய கழுத்தில் ஒவ்வொன்ருக அணிவதையும் மங்களகரமான மழையைப் பொழிவிப்பதையுங் கண்டார். கண்டு பரவசராகி,

அணியர மகளிர் விழைவினை
யகற்ற
அவர்மன நினைவினிற்
பொருந்தும்
மணமக னுருவும் மாலையை
யேந்தி
மயங்கிய திருக்கர வனப்பும்
பணைநல மடைய வுலகுயிர்
தழைப்பப்
பயன்றரு மழைபொழி
கரமும்
குணமிலேன் சிறியேன் கண்டு
கண் டுவந்தேன்
குமரநா யகன்றிருக் கோலம்.

என்று பாடித் துதித்து நிலமிசைச் சாஷ்டாங்கமாக விழுந்து தெண்டனிட்டு எழுந்து நின்ருர். அங்ஙனம் நின்ற நாரத முனிவர்மீது திருவருள் சுரந்த குமாரக் கடவுள் யானைக் கன்றின் மேலேறிய திருவுருவத்தினராக முன் வந்து "ஏ நாரத முனிவ! நீ விரும்பியதெது?" என்று கேட்டருளுதலும் முனிபுங்கவர் மீட்டும் பணிந்தெழுந்து "எம்பெருமானே பெருந் தவப் பேற்றினுல் தேவரீருடைய இளந் திருக்கோலத்தைத் தரிசிக்கப்பெற்றேன். நான் விரும்பியபோதெல்லாம் இந்தத் திருவுருவத்தோடு காட்சி தந்தருள வேண்டும், இதுவே நான் வேண்டுவது, பிறிதெதுவும் வேண்டேன்", என்ருர். இதனைக் கேட்ட பாலசுப்பிரமணியர் புன்னகை புரிந்து "முனியே! தேவரும் உலகரும் என்னை நோக்கி நெடுநாட் டவங்கிடந்து நான் வெளிப்படும்போது மண்ணைப் பொன்னை, மக்களை, வாழ்வைக் கேட்டுப் பெற்றுக்கொண்டு போய்விடுகிருர்கள், நீயேது முழுமூடத்தனமாக ஒன்றும் வேண்டாமென்று சாதித்துக்கொண்டு நிற்கிருய், விரும்பியதைக் கேட்டுப் பெற்றுக்கொள்" என்று பணித்தார், நாரதரும் சுவாமியை நோக்கி "முருகா, கபடநாடக சூத்திராவதாரியாகிய கண்ணன் மருகா, தேவரையும் மக்களையும் ஏமாற்றியனுப்பிவிடுவது போல என்னையும் ஏமாற்றியனுப்பிவிடப் பார்க்கிருயா? எனக்கு மண்ணும் வேண்டாம்; பொன்னும் வேண்டாம்; மக்களும் வேண்டாம்; வாழ்வும் வேண்டாம்; நீ மாருது எனது உள்ளத்தில் வதிந்தருள வேண்டும். பேரழகு வாய்ந்த நினது இளந் திருக்கோலத்தைக் கண்ட பின் வேறு விரும்பத் தக்க பொருள் மூவுலகத்தினுமில்லை. நினக்கு நீயேயொப்பான நீர்மையனே! இவ்வுலகில் ஓட்டவற்றையெல்லாம் பொன்னுக்குப் பரிசவேதியைப் பெற்றும் அதனை வீசியெறிந்துவிட்டு, அப் பரிசவேதியிறைற் பொன்னுகச் சமைாத சிறியதோர் இரும்புத்துண்டைச்சேமித்து வைப்போனும், விருப்பிய பொருளையெல்லாந் தரும் கற்பக விருக்ஷத்தை விரும்பாது அக் கற்பகந் தந்த சிறியதொரு பொற்குவையை விருப்பியவனும் மூடரெனக் கருதப்படுவதுபோலக் காண்டற்கரிய நின்னைக் காணப் பெற்றபின் பிறிதொன்றின் மேல் உள்ளத்தைச் செலுத்தும் வீணரும் மூடரெனப் படுவார். நான் அந்த மூடர் வரிசையிற் சேரமாட்டேன். பெறற்கரும் பொருளைப் பெற்றேன; பிறிதொன்றும் வேண்டேன். நான் தருங் கையுறையாகத் திருமான் மகளிர் இருவரை நினக்குக் கலியாணஞ் செய்து வைக்கப் போகிறேன். போய் வருகிறேன். விடை தந்தருளுக" என்ருர். குமர நாயகனும் திருவருள் சுரந்து தமது திருவடியைத், தண்டனிட்டுக் கிடந்த முனியினது சிரமீது வைத்து அநுக்கிரகிக்கப், பெறற்கரும் பொருளினைப் பெற்ற முனியும் கன்றைப் பிரிந்த புனிற்ருவைப்போலப் பிரிவாற்ருது பிரிந்து போயினுர்.

—




## தனிச் சிங்களமே என்கிருர் ஸ்ரீ சேனநாயக

———

பண்டாரநாயக்க செல்வநாயகம் ஒப்பந்தத்தை எதிர்க்கும் நோக்கத்துடன் கூடிய ஐக்கிய தேசியக் கட்சிக்கூட்டத்தில் ஸ்ரீ டட்லி சேனநாயக பேசும்போது மற்றொரு கூட்டம் கூடி அதை மாற்றும் வரையில் களனியில் நிறைவேற்றிய தனிச்சிங்களப் பிரேரணை நிலைநிற்கும் என்று கூறினுர். மேலும் பேசும்போது குறித்த ஒப்பந்தம் சிங்கள மக்களுக்குத் தீமை செய்வதாகவும்குறிப்பிட்டார்.

---

உ
சிவமயம்

## யாழ்ப்பாணம்
# சைவபரிபாலன சபை

## 69-வது வருடாந்தக் கூட்டம்

———

மேற்படி வருடாந்தக் கூட்டம் ஏவிளம்பி ஹூ ஆவணி மீ 29-௨ (14—9—57) சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சபை ஆச்சிரம நாவலர் மண்டபத்திற் கூடும்.

**நிகழ்ச்சிகள்**

1 தேவாரம்
2 சென்ற வருடாந்தக்கூட்ட வரலாறு வாசித்தல்.
3 செயலாளரின் அறிக்கை.
4 பொருளாளரின் வரவு செலவுக் கணக்கு.
5 C திருவாகசபையின் C பிரிவு அங்கத்தவர்கள் தேர்தல்
6 புதுவருட உத்தியோகத்தர் தேர்தல்
7 பிரேரணைகள்
8 நன்றியுரை

☞ குறிப்பு: பிரேரணைகள் 30-8-57-க்கு முன் செயலாளருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

ஆ. தனபாலசிங்கம்
கௌரவ செயலாளர்

ஆனைப்பந்தி
21-8-57.

---

## மறைஞானசம்பந்தர் குருபூசை

———

நாள்: ஏவிளம்பி ஹூ ஆவணி மீ கக௨ (27-8-57) செவ்வாய்க்கிழமை.

இடம்: சைவபரிபாலன சபை நாவலர் மண்டபம்.

நிகழ்ச்சிகள்:

இரவு ½—7 கடவுளாராதனை
தமிழ்மறையோதல்
ஸ்ரீமத். தி. கலியாணசுந்தரக் குருக்கள் அவர்கள்
இரவு 7—8 பிரசங்கம்
'மறைஞான சம்பந்தர்'
திரு. வே. சோமசுந்தரம் அவர்கள்
சைவாபிமானிகள் யாவரும் சமுகமளிப்பார்களாக.

மு. மயில்வாகனம்,
சமயப்பிரசார அமைச்சர்,
சைவபரிபாலனசபை,
யாழ்ப்பாணம், 20-8-57.

---

## அடைவு நகை ஏல விற்பனவு

———

யாழ்ப்பாணம் வண்ணுர்பண்ணை மேற்கு 415 A காங்கேசந்துறை ரோட்டில் அடைவு பிடிக்கும் ஆ. வை. க. நடராசா அன் கோ கடையில் 18-1-55 முதல் 2-8-56 முடிய அடைவு வைத்து மீட்கப்படாத அடைவு நகைகளை 7-9-57 சனிக்கிழமை காலை 10 மணியளவில் எடுபட்ட நகை புறமீங்கலாக மீதி என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

சி. பசுபதிச்செட்டியார்
வெந்திஸ் மேஸ்தர்.

12-8-57.

---

யாழ்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணுர்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி 245-ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. சுப்பையா பொன்னம்பலம் கந்தையா அவர்களால் 24-8-57 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org